**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 15/2015</u>**

நாள் 15.10.2025

DW1 – வெங்கடாசலம்

த/பெ – லேட்.கருப்பண கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of October 2025)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் இந்த வழக்கில் 3–ம் பிரதிவாதி ஆவேன். வாதி எனது உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான். 2–ம் பிரதிவாதி எனது உடன்பிறந்த சகோதரர். 1–ம் பிரதிவாதி எனது தாயார். நாங்கள் நான்கு பேரும் கருப்பண கவுண்டரின் வாரிசுகள் என்றால் சரிதான். எனது அப்பா கருப்பண கவுண்டர் 17.07.2009–ம் தேதியில் இறந்து போய்விட்டார். எனது அப்பாவின் வாரிசு சான்று நான் வாங்கவில்லை. எனது அப்பாவின் வாரிசு சான்று வாதி வட்டாட்சியரிடம் இருந்து வாங்கியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. எனது அப்பாவிற்கு எங்கள் நான்கு பேரை தவிர வேறு வாரிசுகள் யாரும் கிடையாது என்றால் சரிதான். 9 முதல் 12 பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்தில் பங்கு உள்ளது என்றால் 1967–ம் ஆண்டிற்கு முன்பு வரையில் அவர்களுக்கு பங்கு இருந்தது உண்மை. அதற்கு பின்னிட்டு 22.09.1967–ம் தேதியில் கறார் பாகப்பிரிவினை ஏற்பட்டு விட்ட பிறகு சொத்தில் அவர்களுக்கு உரிமை இல்லை. அந்த வா.சா.ஆ.1 கறார் பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள வாசகங்கள் மற்றும் சொத்து விபரங்கள் உண்மையானது தான். அந்த வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் பிதுராஜ்ஜித வகையில் பாத்தியப்பட்ட

சொத்துக்களை பாகம் பிரித்து கொள்வதாக தான் வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. பி.வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தில் எனது அப்பா கருப்பண கவுண்டரின் வயதாக சுமார் 5 வயது என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பி.வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தில் கண்ட சொத்தை எனது பாட்டி சின்னக்காள் மைனராக இருந்த எனது அப்பா பெயருக்கு 1941–ம் ஆண்டில் கிரையம் வாங்கி வைத்துள்ளார். பி.வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தில் கண்ட சொத்தும் பரம்பரை சொத்து என்று சொன்னால் சரியல்ல. அந்த பி.வா.சா.ஆ.5–ல் கண்டுள்ள சொத்தையும் சேர்த்து தான் வா.சா.ஆ.1 கறார் பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதனால், வா.சா.ஆ.1–ன் படி பி.வா.சா.ஆ.5–ல் கண்ட சொத்தும் எங்கள் குடும்பத்தின் பரம்பரை சொத்து என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களான நான்கு அயிட்ட சொத்துக்கள் தவிர எங்கள் குடும்பத்திற்கு வேறு சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

3. எனது தகப்பனார் பவர்லூம் சம்பந்தமாக பெறப்பட்ட ஒரு அனுமதி ஆவணம் தான் பி.வா.சா.ஆ.16 என்றால் சரிதான். அந்த பி.வா.சா.ஆ.16 1980–ம் ஆண்டில் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது அப்பா எப்போதும் ஆங்கிலத்தில் தான் கையொப்பம் போடுவார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள 15.05.2009–ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பி.வா.சா.ஆ.9–ல் எனது அப்பா கைரேகை தான் வைத்துள்ளார் என்றால் சரிதான். அதில் எனது அப்பாவிற்கு இடது கை வாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் வலது கை பெருவிரல் ரேகை வைத்துள்ளேன் என்ற குறிப்பு உள்ளது என்றால் சரிதான். அதேபோல், அவருக்கு உடல்நிலை சரியில்லாததாலும், கை நடுக்கம் இருப்பதாலும்

கைரேகை வைப்பதாகவும் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால், எனது அப்பாவிற்கு வலது கையில் கையெழுத்து போட முடியும் என்றால், கைநடுக்கம் இருந்ததால் அவரால் வலது கையால் கையெழுத்து செய்ய முடியவில்லை. எனது அப்பா மேற்படி வீதம் உடல்நிலை சரியில்லாமல் சுமார் 15 நாட்களாக இருந்து வந்தார். எனது அப்பாவை திருப்பூரில் உள்ள TMF மருத்துவமனைக்கும், அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கும் சிகிச்சைக்காக அழைத்துச் சென்றேன். ஆனால், TMF மருத்துவமனையில் தான் உள்நோயாளியாக சேர்த்து சிகிச்சை எடுத்தோம். அவ்வாறு சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான மருத்துவ ஆவணங்கள் எதுவும் என் வசம் இல்லை. சிறிய பிரச்சனை என்றால் அருகில் உள்ள கிளினிகளுக்கும் சென்று சிகிச்சை எடுத்துக்கொள்வோம். அதேபோல், அடிக்கடி TMF மருத்துவமனைக்கும் சென்று சிகிச்சை எடுத்துக்கொள்வோம். அந்த TMF மருத்துவமனையில் உள்ள டாக்டர்.பழனிச்சாமி எங்களுக்கு ஒரு வகையில் துாரத்து உறவினர் ஆவார். எனது அப்பாவிற்கு ஏற்பட்ட வாத நோய்க்காக வேண்டி அவர் இறப்பதற்கு முன்பு 1 வருட காலமாக TMF மருத்துவமனையில் தான் தொடர் சிகிச்சை எடுத்து வந்தார் என்றால் அது தவறு. வாதி தரப்பில் அந்த TMF மருத்துவமனையிலிருந்து எனது தகப்பனாருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்த மருத்துவ ஆவணங்களை இந்த நீதிமன்றத்திற்கு வரவழைக்கப்பட்ட மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியும். அந்த உத்தரவு ஏற்பட்ட பிறகு நான் சென்று மருத்துவ ஆவணங்களை கொடுக்க வேண்டாம் என்று டாக்டர்.பழனிச்சாமியிடம் சொல்லி தடை செய்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

4. எனது அப்பாவிற்கு சிகிச்சை அளிக்கப்பட்டதற்கான மருத்துவ ஆவணங்களை நான் தாக்கல் செய்யாமலும், மருத்துவரை மருத்துவ ஆவணங்களை தாக்கல் செய்யாமல் தடுத்தும் விட்டேன் என்றும் அவ்வாறு மருத்துவ ஆவணங்களை தாக்கல் செய்யும் பட்சத்தில் பி.வா.சா.ஆ.9 செட்டில்மெண்ட் ஆவணம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்ற விபரம் தெரிந்து விடும் என்பதற்காக தான் மேற்படி மருத்துவ ஆவணங்களை சமர்பிக்காமல் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.9 எழுதப்பட்ட தேதியான 15.10.2009–ம் தேதிக்கு முன்பாக சுமார் 1 மாதத்திற்கு முன்பாக எனது அப்பாவை மருத்துவமனைக்கு கடைசியாக வெளிநோயாளியாக சிகிச்சைக்கு அழைத்துச்சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டு அழைத்து வந்தேன். எனது அப்பாவை நான் தான் மருத்துவ மனைக்கு தொடர்ந்து அழைத்துச் சென்று சிகிச்சை எடுத்து வந்தேன். மேற்படி வீதம் எனது அப்பா உடல்நிலை சரியில்லாமல் இருந்து வருகின்ற விபரத்தை எனது அம்மா மூலம் வாதி தெரிந்து கொண்டார். ஆனால், வாதி வந்து பார்க்கவில்லை. அதேபோல், எனது அண்ணன் 2–ம் பிரதிவாதியும் வந்த பார்க்கவில்லை. நான் சொல்வது பொய் என்றும் எனது அப்பாவின் சிகிச்சையின் போது வாதியும், 2–ம் பிரதிவாதியும் உடனிருந்து பார்த்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.9 செட்டில்மெண்ட் ஆவணத்தில் நான் மட்டும் செலவு செய்து மருத்துவ சிகிச்சை பார்த்தேன் என்ற வாசகம் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.9–ல் உள்ள கைரேகையானது எனது அப்பா கருப்பண கவுண்டரின் கைரேகையே கிடையாது என்றும், நான் வேறு நபரை அழைத்துச் சென்று கைரேகை வைத்து செட்டில்மெண்ட் ஆவணத்தை மோசடியாக

ஏற்படுத்திக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. அதில் உள்ள சாட்சி ராஜேந்திரன் எனது மனைவியின் தங்கையின் கணவர் ஆவார். அந்த ராஜேந்திரன் தான் எல்லா பத்திரத்திலும் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது அப்பா உண்மையாகவே செட்டில்மெண்ட் ஆவணத்தை எனது பெயருக்கு எழுதி வைத்திருந்தால் வேறு நபர்களை சாட்சியாக வரவழைத்து ஆவணத்தை எழுதி வைத்திருப்பார் என்றும், நான் மோசடியாக ஏற்படுத்திக்கொண்டதால் தான் எனது மனைவியின் தங்கையின் கணவரான ராஜேந்திரனை சாட்சியாக வைத்து ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல.

5. எனது அப்பாவிற்கு மூளையில் கட்டி இருந்ததால் தான் அவருக்கு வாத நோய் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு வாத நோய் ஏற்பட்டதற்கான காரணத்தை மருத்துவரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா? என்றால் மருத்துவர் வயோதிகத்தின் காரணமாக வாத நோய் வந்துள்ளதாக என்னிடம் சொன்னார். அந்த டாக்டர்.பழனிச்சாமி TMF மருத்துவமனையில் தான் இருந்து வருகிறார். அவரை வாதி தரப்பில் வரவழைத்து விசாரித்துக்கொள்ள எனக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை.

6. நான் தாக்கல் செய்துள்ள மின் இணைப்பு சம்பந்தமான ஆவணங்கள் இந்த வழக்கிற்கு பின்னிட்டு பெறப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு மத்தியில் கடை கட்டிடங்களை விரிவாக்கம் செய்து கட்டிடம் கட்டியுள்ளேன் என்றால் சரிதான். அந்த 4 கடைகளில் இருந்தும் மாதம் ரூ.10,000/– வீதம் வாடகை கடந்த 1 வருட காலமாக வருகிறது. அவ்வாறு மின் இணைப்பு, தண்ணீர் வரி, வீட்டு வரி மற்றும் பட்டா மாற்றம் பெறுவது சம்பந்தமாக வாதி தரப்பில் ஆட்சேபணை

மனு கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதில் பட்டா மாற்றம் சம்பந்தமாக இருதரப்பினரை அழைத்து அதிகாரிகள் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். நான் உயர்நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று தான் மின் இணைப்பு பெற்றேன். அந்த உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தாயராக உள்ளேன். அதேபோல், பெயர் மாற்றம் கேட்டு நான் கொடுத்த விண்ணப்பங்களையும் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா? என்றால் என் கைவசம் இருந்தால் தாக்கல் செய்கிறேன்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.10.15 15:06:39 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**